# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2001 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

2001, மாச்சு மாதம் 23 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 16.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

## 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2001, மாச்சு மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ. ஓ 20/2000
4573

## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கும், அதனோடு தொடர்பான அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றதும்), கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கும் வரும் தேதியும்.*

### பாகம் I

### தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தைத் தாபித்தல்

2. (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றதான) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் என அழைக்கப்பட வேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தைத் தாபித்தல்.*

(2) நிறுவனமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு, இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் உடையதான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. நிறுவகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

*நிறுவகத்தின் தத்துவங்கள்.*

(அ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறாக அத்தகைய அளவீடுகளையும் புலனாய்வுகளையும் நடாத்துதல் ;

(ஆ) நிறுவகத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்காகக் கட்டணங்களையும் ஏனைய இறுப்புக்களையும் அறவிடுதல் ;

(இ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகவுள்ளவிடத்தெல்லாம், அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல், வாடகைக்குக் கொடுத்தல், அடைமானம் வைத்தல், விற்பனைசெய்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஈ) நிறுவகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் காப்புறுதி, வீடமைப்பு, சேமநல அத்துடன் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு, ஒன்றில் நேரடியாகவோ அல்லது முகவர்கள் மூலமாகவோ, அவசியமானவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஊ) நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனங்களும் பதவியுயர்வுகளும், ஊதியம், இடமாற்றங்கள், லீவு, பதவிவிலக்கல்கள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தொடர்பான விதிகள் உட்பட, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கான விதிகளை ஆக்குதல் ;

(எ) முகாமைச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புகளில் நிறுவகத்தின் பயன்படுத்தப்படாத நிதிகளை முதலீடுசெய்தல் ; அத்துடன்

(ஏ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு உகந்தவாறான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் செய்தல் ;

**4.** நிறுவகத்தின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :— நிறுவகத்தின் பணிகள்.

(அ) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான நிலையமாகச் செயலாற்றுதல் ;

(ஆ) நவீன தொழினுட்ப முறைகளை, மற்றவற்றுக்கிடையில், பயன்படுத்தி கூட்டுறவு அபிவிருத்தியில் பயிற்சியளித்தல் ;

(இ) கூட்டுறவு அபிவிருத்தியின் மீதான ஆராய்ச்சியை மேம்படுத்தல் ;

(ஈ) கூட்டுறவு அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே இடைச்செயற்பாட்டுக்காகவும், தகவற் பரிமாற்றத்துக்காகவும் ஆன வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்கான மூலவள நிலையமாகச் செயலாற்றுதலும், வெளியீடுகள் என்ற வகையாக அத்தகைய தரவுகளை ஒப்புநோக்குதலும் பரப்புதலும் ;

(ஊ) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான பாடங்களில் கல்விசார் மற்றும் பயிற்சிநெறிகளை நடாத்துதலும், அத்தகைய நெறிகளை பயின்று உள்ளோரும் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளோருமான ஆட்களுக்குச் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் திறமைச் சித்திகளையும் அளித்தலும் ;

(எ) முகாமைத்துவ திறமைகளைத் தேவைப்படுத்துகின்ற கூட்டுறவுத் தொழில் முயற்சிகளைப் பொறுப்பேற்றலும் முகாமை செய்தலும் ;

(ஏ) கூட்டுறவுத் தொழில்முயற்சிகளுக்கு உயர் தொழில்சார் மதியுரையை வழங்குதல் ;

(ஐ) மாதிரிக் கூட்டுறவுக் கிராமங்களையும், மாதிரிக் கூட்டுறவுத் தொழில்நிலையங்களையும் பிராந்திய நிலையங்களையும் தாபித்தல் ; அத்துடன்

(ஓ) நிறுவகத்தின் பணிகளை ஒத்த பணிகளை நிறைவேற்றுகின்றவையும், இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ளவையுமான ஒழுங்கமைப்புகளுடன் ஒத்திசைதல்.

## பாகம் II

### முகாமைச்சபை

முகாமைச்சபை நிறுவகத்தின் ஆளும் குழுவாக விருத்தல்.

**5.** (1) நிறுவகத்தின் அலுவல்களினது நிருவாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன, முகாமைச்சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) முகாமைச்சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) அதற்கென ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட, நிறுவகத்தின் அபிவிருத்தித் திட்டங்களையும் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் அங்கீகரித்தல் முகாமைச்சபையின் கடமையாதல் வேண்டும்.

முகாமைச் சபையின் அமைப்பு.

**6.** (1) முகாமைச்சபையானது, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது –

(i) கூட்டுறவு அபிவிருத்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்கு பதவி வகிக்கின்ற ஆள் அல்லது அவரது நியமத்தர் ;

(ii) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ;

(iii) இலங்கைத் தேசிய கூட்டுறவுப் பேரவையின் தவிசாளர் ;

(iv) இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவகத்தின் தவிசாளர் ; அத்துடன்

(V) 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ; (அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" ஒருவர் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார் ) :—

(i) கூட்டுறவுத்துறையில் பரந்த அனுபவமும் முகாமையிலான அனுபவமும் வாய்ந்தவர்களாகவுள்ள மூன்று ஆட்கள் ; இவர்கள், கூட்டுறவு அபிவிருத்தி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுவர் ;

(ii) உயர்கல்வி அமைச்சின் பிரதிநிதியொருவர் ; இவர், அவ்விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(iii) பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர் ; இவர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(2) அமைச்சர், முகாமைச் சபையின் உறுப்பினர்களுள் ஒருவரை முகாமைச் சபையின் தவிசாளராகவிருப்பதற்கு நியமித்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகல் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப் படுவதன்மேல் பயனுடையதாதலும் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரும், இறப்புக் காரணமாக சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயுள்ளவிடத்து, அவரினிடத்திற் செயலாற்றவென அமைச்சர் இன்னோராளை நியமிக்கலாம்.

(6) அமைச்சர், காட்டப்பட்ட காரணங்களுக்காக, எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

*முகாமைச்சபை உறுப்பினராக நியமிக்கப்படுவதற் கான அல்லது தொடர்ந்திருப்பதற் கான தகைமை யீனங்கள்.*

**7.** ஆளொருவர், பின்வருமாறிருப்பின், முகாமைச்சபை உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்ப தற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :—

(அ) அவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாணசபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக இருப் பின் அல்லது வரின் ;

(ஆ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்ற ஆளொருவராக வெளிப்படுத் தப்பட்டிருப்பின் ;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற வராகவும் வங்கிமுறிந்தவராகவும் தொடர்ந்திருப் பின் ;

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக்கு உட்பட்டவராகவிருப்பின் அல்லது உட்பட்டவராகவிருந்திருப்பின் ;அத்துடன்

(உ) அவர், கூட்டுறவுகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்.

*முகாமைச்சபை உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குதல்.*

**8.** முகாமைச்சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது எவரேனும் உறுப்பினருக்கு, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*தவிசாளர் தலைமை தாங்குதல்.*

**9.** (1) தவிசாளர் முகாமைச்சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதிருக்கையில், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கவென, தம்முள்ளிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) முகாமைச்சபைக் கூட்டங்கள் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது நடாத்தப்படல் வேண்டும்.

(3) முகாமைச்சபைக் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) முகாமைச்சபையின் கூட்டங்களிலான எல்லா முடிவுகளும் சமுகளித்துள்ள உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையினால் செய்யப்படல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அல்லது முகாமைச்சபையின் கூட்டத்தில் தலைமைதாங்கும் வேறெவரேனும் உறுப்பினர், தமது சொந்த வாக்குடன்சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, முகாமைச்சபை அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் முகாமைச்சபை பணியாற்றுதல் வேண்டும்.

**10.** முகாமைச்சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் பணியாற்றலாமென்பதுடன், முகாமைச் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், முகாமைச்சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

நிறுவகத்தின் இலச்சினை.

**11.** நிறுவகத்தின் இலச்சினையானது –

(அ) காலத்துக்குக்காலம் முகாமைச்சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) முகாமைச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) முகாமைச்சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது ; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் III

### கற்கைச்சபை

கற்கைச் சபையின் அமைப்பு.

**12.** (1) நிறுவகத்தின் கற்கைச்சபை, முகாமைச் சபையினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) கற்கைச் சபையின் தவிசாளராகவிருக்கவேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியின் பிரதிநிதி ஒருவர்;

(இ) பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஈ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(உ) கூட்டுறவு தொடர்பில் முகாமையிலும் பயிற்சியிலும் பரந்த அனுபவம் கொண்டுள்ளவரென அமைச்சர் அபிப்பிராயப்படும், கூட்டுறவுத் துறையில் அல்லது தனியார் துறையில் தொழில் புரியும் ஆள் ஒருவர்.

(2) நிறுவகத்தின் எவரேனும் அலுவலர் கற்கைச்சபையின் செயலாளராகப் பணியாற்றலாம்.

(3) கற்கைச்சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எந்தப் பதவியின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுதற்குத் தகைமையுடையவராக வந்தாரோ அந்தப் பதவியிலிருந்து விலகல், இறப்பு, அகற்றப்படுதல் அல்லது பதவிவிலக்கப்படுதல் என்பனமூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

**13.** நிறுவகத்தின் கற்கைச் சபையானது, முகாமைச்சபையினால் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கிணக்கமாக, பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் :— கற்கைச் சபை.

(அ) நிறுவகத்திலான பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தல் ;

(ஆ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் நெறிகளுக்கான பாட விதானங்களையும் விடயப்பொருட்களையும் உருவாக்குதல் ;

(இ) பரீட்சைப் பாடத்திட்டங்களை வகுத்தமைத்தலும் அங்கீகரித்தலும், நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளை மேற்பார்வைசெய்தலும், நிறுவகத்தின் கல்விசார், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான மதிப்பீட்டுத்திட்டங்களைத் தயாரித்தலும்;

(ஈ) முகாமைச்சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கு அமைய, நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகளை வழங்குதல் ; அத்துடன்

(உ) புலமைப் பரிசில்களையும், பட்டிகளையும், ஏனைய அளிப்புக்களையும் வழங்குவதற்கான நிபந்தனைகளை விதித்துரைத்தல்.

கற்கைச்சபை உறுப்பாண்மையிலான வெற்றிடம்.

**14.** (1) கற்கைச்சபை உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருக்கும்போது, அத்தகைய வெற்றிடம் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதி எழுத்தில் முகாமைச்சபைக்குத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன், முகாமைச்சபையானது அத்தகைய வெற்றிடத்தை நியாயமானவொரு காலப்பகுதியினுள் நிரப்புவதற்கான நடபடிகளை எடுத்தலும் வேண்டும்.

(2) கற்கைச்சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், கற்கைச்சபையில் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது அத்தகைய சபையின் எவரேனும் உறுப்பினரினது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும், செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

கற்கைச் சபையின் கூட்டங்கள் முதலியன.

**15.** (1) கற்கைச்சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) கற்கைச்சபையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட வேண்டிய எல்லாக் கருமங்களும், சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையினால் முடிவுசெய்யப்படல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்குமிடத்து, தலைமைதாங்கும் உறுப்பினர் தமது சொந்த வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, கற்கைச்சபை, அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலையும் தீர்மானித்தல் வேண்டும்.

(4) கற்கைச்சபையின் உறுப்பினர்களுக்கு, அமைச்சருடனும் நிதியமைச்சருடனும் ஆன கலந்தாலோசனையுடன் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் IV

### நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர்

பணிப்பாளர் தலைமையதிபதி முதலியோரை நியமித்தல்.

**16.** (1) முகாமைச் சபையானது, நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும் ; பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் பிரதான நிறைவேற்றலுவலராகப் பணியாற்றுதல் வேண்டும். நிறுவகமானது பணிப்பாளர் தலைமையதிபதியின் தொழில் நியதி, நிபந்தனைகள் பற்றி முடிவு செய்தல் வேண்டும் என்பதுடன், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, முகாமைச்சபையின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, நிறுவகத்தின் அலுவல்களினது நிருவாகத்துக்குப் பொறுப்பாக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) முகாமைச் சபையானது, தம்பக்க வழக்கை உரைப்பதற்கான சந்தர்ப்பமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளித்த பின்னர், பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி இறப்பதன்மூலம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அல்லது பதவிவகிப்பவரினால் பதவி விலகப்படுவதன்மூலம் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி வறிதாக வருதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய, பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவி வகிக்கின்ற எவரேனுமாள், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

*நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும்.*

**17.** (1) முகாமைச்சபையானது, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமென முகாமைச்சபை கருது கின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், முகாமைச்சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் செலுத்தப்படல் வேண்டு மென்பதுடன், அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும், முகாமைச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(3) முகாமைச்சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) முகாமைச் சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம். பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்

படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத் துக்குச் சேவையாற்றுவாரென உடன்பட்டு அரசாங்கத்தோடு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை நிறுவகம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப் பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்படும் சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்ப அவ்வுறுப்பினரினதும் அல்லது அலுவலரின தும் அல்லது சேவையாளரினதும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்தோடு நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதே உள்ளூ ராட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது உள்ளூரதி காரசபையினாலும் நிறுவகத் தினாலும் உடன்பட்டுக்கொள்ளப் படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளின் மேல் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம். உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் ஆளாகவுள்ள அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு ஆளாதல் வேண்டும்.

(7) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அந்தக் கூட்டுத்தாபனத்தினது ஆளும் சபையின் சம்மதத்துடன், முகாமைச்சபையினால் தீர்மானிக்

கப்படக்கூடியவாறான காலப்பகுதியொன்றுக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அக்கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் நிறுவகத்தினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக அவர் நியமிக்கப்படலாம்.

(8) நிறுவகத்தின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அந்த அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன், நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*நிறுவகம் அதன் தத்துவங்களைக் கையளிக்கலாம்.*

**18.** நிறுவகமானது, அதன் தத்துவங்களுள் அத்துடன் பணிகளுள் எவற்றையும் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் முகாமைச்சபையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அத்தகைய தத்துவத்தை அல்லது பணியை பிரயோகித்தலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் V

### நிதி

*நிறுவகத்தின் நிதியம்.*

**19.** (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அத்தகைய நிதியத்துக்குள் வரவுவைக்கப் படல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) நிறுவகமானது, அதன் தத்துவங்கள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) நன்கொடை, கொடை அல்லது மானியக்கொடை வருமானம், கட்டணங்கள், இறுப்பனவு அல்லது கடன் என்றவகையாக எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் நிறுவகத்தினால் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகமானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) கூட்டுறவுத் துறையிலுள்ள பகிரங்க அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கூட்டுறவுத் தலைவர்களுக்குமான பயிற்சிநெறிகளுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**20.** முகாமைச்சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்றவகையாக அல்லது வேறுவகையாக அமைச்சரினதும் நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாக

நிறுவகத்தின் கடனெடுக்கும் தத்துவங்கள்.

வுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதே ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்ட பொது அதிகாரவளிப் பொன்றின் நியதிகளுக்கிணங்க முகாமைச்சபை கடனாகப் பெறலாம் :

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின்கீழ் நிறுவகத்தினால் திரட்டப்படும் கடனொன்று தொடர்பில் நிலுவையாகவுள்ள கூட்டு மொத்தத் தொகையானது, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுதலாகாது.

நிறுவகத்தின் நிதியாண்டு.

**21.** நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

நிறுவகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

**22.** அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

**23.** பொல்கொல்லையிலுள்ள இலங்கைக் கூட்டுறவுப் பாடசாலைக்காகவும் அதன் சார்பிலும் பொல்கொல்லையிலுள்ள இலங்கைக் கூட்டுறவு பாடசாலையினால் அல்லது அதனோடு அல்லது அரசினால் அல்லது அரசுடன் செய்துகொள்ளப் பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருந்துவருபவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன் படிக்கைகளும், பொல்கொல்லையிலுள்ள இலங்கைக் கூட்டுறவுப் பாடசாலைக்காகவும் அதன் சார்பிலும் உறப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான பொல்கொல்லையிலுள்ள இலங்கைக் கூட்டுறவுப் பாடசாலையின், அல்லது அரசின் எல்லாப் பொறுப்புக் களும் விடயத்துக்கேற்ப, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் அல்லது நிறுவகத்தின் பொறுப்புக் களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்.

அசைவுள்ள மற்றும் அசைவற்ற அரச ஆதனம் நிறுவகத்துக்குக் கிடைக்கக் கூடியதாக்கப்படுதல்.

**24.** (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம், நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்றவிடத்து அத்தகைய நோக்கம், அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை கொடுக்கப் படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அதற்கிணங்க அப்பிரிவின் ஏற்பாடுகள் நிறுவ கத்துக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை யொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் நிறுவகத்தின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவத்துக்குக் கைமாற்றி அதற்கு உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அரசின் அசைவுள்ள ஆதனம் சம்பந்தமான கட்டளையெதுவும், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாடுடைய அமைச்சரின் ஒருப்பாடின்றி இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதலாகாது.

நிறுவகத்தின் நோக்கங்களுக்காக தனியாள் காணிகளைக் கொள்ளுதல்.

**25.** (1) ஏதேனும் அசைவற்ற ஆதனம் நிறுவகத்தின் குறிப்பிட்ட ஏதேனும் நோக்கத்துக்காகக் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்நோக்கத்துக்காக உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அந்த ஆதனம் பகிரங்க நோக்கமொன்றுக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படுதலும் நிறுவகத்துக்குக் கைமாற்றப் படுதலும் வேண்டும்.

(2) நிறுவகத்துக்காகக் காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதலுக்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது முகாமைச் சபையின் பணிப்பின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

**26.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக நிறுவகத்துக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது முகாமைச் சபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக முகாமைச்சபையின் எவரேனும் உறுப்பினர்க்கெதிராக அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கெதிராக, சேவையாளருக்கெதிராக அல்லது முகவருக்கெதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் உறப்படும் ஏதேனும் செலவு நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்துக்குச் செலுத்தப்படும் அல்லது அதனால் பெறப்படும் எவையேனும் செலவுதொகைகள், நிறுவகத்தின் நிதியத்துக்குள் வரவுவைக்கப்படலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது முகாமைச்சபையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான எவரேனுமாளினாற் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்படும் எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

**27.** முகாமைச்சபையின் உறுப்பினர்கள் எல்லோரும் அத்துடன் நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர் களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

*முகாமைச்சபை உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**28.** இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, நிறுவகமானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, நிறுவகமானது, அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன் றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**29.** நிறுவகத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததி லிருந்து ஆறு மாத காலப்பகுதியினுள் முகாமைச்சபை அவ்வாண்டின்போது நிறுவகத்தின் செயற்பாடுகளை விவரிப்பதான அறிக்கை ஒன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சர், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்தில் இடுவித்தலும் வேண்டும்.

*முகாமைச்சபை அறிக்கையை நிறுவகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

**30.** (1) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றி, அமைச்சர் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளை எழுத்தில் முகாமைச்சபைக்கு விடுக்கலாமென்பதுடன், முகாமைச்சபையானது அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை விடுப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

(2) அமைச்சர் காலத்துக்குக்காலம், நிறுவகத்தின் வேலை தொடர்பாக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை எழுத்தில் தமக்குக் கொடுத்துதவும்படி முகாமைச் சபையைப் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் முகாமைச்சபையின் கடமையாதலும் வேண்டும்.

**31.** (1) எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது விதித்துரைக்

*ஒழுங்குவிதிகள்.*

கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன் றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

*ஏதேனும் ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**32.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**33.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய —

"ஆளும் சபை" என்பது, பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்று தொடர்பாக, அத்தகைய கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமையும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை அல்லது எவ்வாறாயினும் விவரிக்கப்பட்ட வேறு குழு என்று பொருளாகும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய சபையினால் பிரயோகிக்கப் படும், புரியப்படும் மற்றும் நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்ததாகவுள்ள அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும், ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் வேறேதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, ஓர் உயர்கல்வி நிறுவனம் தொடர்பாக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை என்று பொருளாகும் ; அத்துடன்

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.